# செல்வப் பெருந்தகை, திருமாவளவன், காதர் மொய்தீன் உள்ளிட்ட தலைவர்களுடன் விஜய் சந்திப்பு

சென்னை, மே.13

**முதலமைச்சர் விஜய் காதர் மொய்தீன், செல்வப் பெருந்தகை, சி.வி.சண்முகம், திருமாவளவன் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.**

முதலமைச்சர் விஜய் அரசியல் நாகரிகம் கருதி அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து வருகிறார்.

ஏற்கனவே திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோரை முதலமைச்சர் விஜய் ஏற்கனவே சந்தித்து வாழ்த்து பெற்றிருந்தார்.

அந்த வகையில் நேற்று 2வது நாளாக தலைவர்களை சந்தித்தார். சென்னை மண்ணடியில் உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தலைமை அலுவலகத்தில் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீனை சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது, மாநில பொதுச்செயலாளர் முகமது அபுபக்கர், நவாஸ் கனி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் சையது பாரூக் பாஷா, ஏ.எம்.ஷாஜகான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## சத்தியமூர்த்தி பவன்

அதைத்தொடர்ந்து சென்னை சத்தியமூர்த்தி பவனுக்கு சென்ற விஜய்யை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பொன்னாடை போர்த்தி வரவேற்று விஜய்யின் கையை பிடித்து மக்கள் வெள்ளத்திற்குள் கட்சி அலுவலகத்திற்குள் அழைத்துச் சென்றார். அங்கு மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜர் உருவப்படத்திற்கு விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து கட்சி அலுவலகத்திற்குள் கட்சியின் முக்கிய நிர்வாகிகளை சந்தித்தார். அங்கு விஜய் செல்வப் பெருந்தகை. மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். அதைத் தொடர்ந்து சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார், தமிழ்நாடு காங்கிரஸ் துணைத்தலைவர் (ஊடக பொறுப்பாளர்) ஆ.கோபண்ணா எழுதிய காமராஜ் ஒரு சகாப்தம் என்ற புத்தகத்தை பரிசாக வழங்கினார். முதலமைச்சர் விஜய் அந்த புத்தகத்தை உதவியாளரிடம் கொடுக்காமல் தனது மடியிலேயே பொக்கிஷத்தை பாதுகாப்பது போன்று வைத்திருந்ததையும் பார்க்க முடிந்தது.

இந்த சந்திப்பின் போது, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கே.வி.தங்கபாலு, திருநாவுக்கரசர், பீட்டர் அல்போன்ஸ், தேசிய செயலாளர் நிவேதித் ஆல்வா உள்பட பலர் திரண்டிருந்தனர்.

சென்னை சத்தியமூர்த்தி பவனுக்கு நேற்று முதலல்அமைச்சர் விஜய் வருகை தந்தார். சத்தியமூர்த்தி பவன் வளாகத்திற்குள்ளும் காங்கிரஸ் தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் குவிந்திருந்தனர். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

## திருமாவளவன் இல்லம்

அதைத்தொடர்ந்து வேளச்சேரியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனின் இல்லத்திற்கு முதலமைச்சர் சென்றார். அங்கு அவரை திருமாவளவன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் விஜய்க்கு பொன்னாடை போர்த்தி, ஏலக்காய் மாலை அணிவித்து, பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்திய அரசியல் சாசனத்தின் முகப்புரை போட்டோவை நினைவு பரிசாக வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர்கள் சிந்தனை செல்வன், ரவிக்குமார், துணை பொதுச் செயலாளர் வன்னியரசு எம்.எல்.ஏ., பொருளாளர் எஸ்.எஸ்.பாலாஜி, காட்டு மன்னார் கோவில் தொகுதி எம்.எல்.ஏ. ஜோதிமணி, செய்தி தொடர்பாளர் பாவலன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

முதலமைச்சர் விஜய்யின் அரசியல் கட்சி தலைவர்கள் சந்திப்பின்போது அமைச்சர்கள் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் விஜய், சத்தியமூர்த்தி பவனுக்கு நேரில்சென்று தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப் பெருந்தகையை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் விஜய், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து பொன்னாடை அணிவித்து, மலர்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் விஜய், மண்ணடியில் உள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் அலுவலகத்திற்கு நேரில் சென்று, தேசிய தலைவர் காதர் மொய்தீனை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் விஜய், சென்னையில் உள்ள அண்ணா தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.சண்முகம் அலுவலகத்திற்கு நேரில் சென்று, எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம், நத்தம் விஸ்வநாதன், டாக்டர் சி.விஜயபாஸ்கர் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களை சந்தித்து பொன்னாடை அணிவித்து மலர்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

## சி.வி.சண்முகம் குழுவை விஜய் சந்தித்தார்

அண்ணா தி.மு.க.வில் கோஷ்டி மோதல் வலுத்து வரும் நிலையில் சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் அலுவலகத்திற்கு விஜய் நேற்று மாலை சென்றார். அங்கு சி.வி.சண்முகம், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி. தங்கமணி, நத்தம் விசுவநாதன், டாக்டர் சி.விஜயபாஸ்கர். எம்.ஆர்.விஜயபாஸ்கர், கே.சி.வீரமணி, ஆர்.காமராஜ் உள்ளிட்டோர் முதல்அமைச்சர் விஜய்யை அவரது கார் அருகே சென்று வரவேற்று அழைத்து வந்தனர்.அலுவலகத்துக்குள் சி.வி.சண்முகம் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் முதலமைச்சர் விஜய்க்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றனர். அப்போது விஜய்யிடம் தங்களது தரப்புக்கு 28 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாக சி.வி.சண்முகம் தெரிவித்தார்.

# எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் விஜய் சந்திக்க வேண்டும்: திருமாவளவன் விருப்பம்

சென்னை, மே.13

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனை, முதலமைச்சர் விஜய் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இதைத்தொடர்ந்து, திருமாவளவன் நிருபர்களிடம் கூறியதாவது:–

நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய் வெற்றிபெற வேண்டுமெனக் கூறி வாழ்த்தினேன். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அனைத்து கட்சி தலைவர்களையும் நேரில் சென்று சந்தித்ததை சுட்டிக்காட்டி பாராட்டினேன். இதேபோல, அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தை தெரிவித்தேன். முதலமைச்சர் விஜய்யின் அணுகுமுறை அரசியல் களத்தில் புதியது. அரசியல் நாகரிகத்தின் முதிர்ச்சி. அண்ணா தி.மு.க.வில் நடைபெறும் உள்கட்சி பிரச்சினையில் நான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை.

அண்ணா தி.மு.க.வில் 30 பேர் தனி அணியாக இருப்பதால் அவர்களால் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது கட்சி மாறி வாக்களிக்க முடியுமா? எனத் தெரிய வில்லை. அண்ணா தி.மு.க. என்றால் அது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அண்ணா தி.மு.க. என்றே நாங்கள் கருதுகிறோம். போட்டி அண்ணா தி.மு.க.வாக விலகி தனி குழுவாக இயங்கும் நிலையில் அவர்களுக்கு அங்கீகாரத்தை சபாநாயகரே வழங்குவார். முதலமைச்சரின் அரசியல் பிரிவு சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள ஜோதிடர் ரதன் பண்டிட் த.வெ.க.வின் செய்தி தொடர்பாளராக இருக்கிறார். செய்தி தொடர்பாளர் என்பதால் அந்த வாய்ப்பை வழங்கியிருப்பதாகவே கருதுகிறேன். ஜோதிடத்தை நம்புவது வேறு, மதவாத அரசியலில் ஈடுபடுவது வேறு.

இவ்வாறு அவர் கூறினார்.






**திங்கட்கிழமைதோறும் குடிநீர் வினியோகத்தை கலெக்டர்கள் ஆய்வு செய்ய அறிவுறுத்தல்**

# கோடை காலத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம்: அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை

சென்னை, மே 13–

முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்தும், கோடை காலத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விரிவான ஆய்விற்குப் பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் வழங்கலில் உள்ள இடர்பாடுகளை போர்க்கால அடிப்படையில் களைந்து, லாரிகளின் மூலமாகவும், புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தும், மாற்று ஏற்பாடுகள் செய்தும் சீரான குடிநீர் விநியோகம் செய்திட உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் திங்கட்கிழமைதோறும் குடிநீர் விநியோகத்தை ஆய்வு செய்து தொடர் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மேலும் எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு, தூர்வாரும் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்புப் பணிகளை துரிதப்படுத்தி காலதாமதமின்றி தொடங்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் எம். சாய் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் மதுசூதன் ரெட்டி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பி. பொன்னையா, பேரூராட்சிகள் இயக்குநர் பிரதீப் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஆனந்த்மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**லார்ட்ஸ் குளோரோ அல்காலி லிமிடெட்**
**CIN No: L24117RJ1979PLC002099**
**பதிவு அலுவலகம்:** SP–460, மத்ஸ்யா இண்டஸ்ட்ரியல் ஏரியா, ஆல்வார்–301030 (ராஜஸ்தான்)
**கார்ப்பரேட் அலுவலகம்:** A–281, 1வது தளம், டிஃபென்ஸ் காலனி, புது தில்லி–110024
**தொலைபேசி:** 011–40239034/35,
**இணையதளம்:** www.lordschloro.com;
**மின்னஞ்சல்:** secretarial@lordschloro.com

**அறிவிப்பு**

ஜனவரி 30, 2026 தேதியிட்ட செபி (SEBI) சுற்றறிக்கை HO/38/13/11(2)2026–MIRSD–POD/I/3750/2026–இன் படி, ராம் லால் என்பவரிடமிருந்து திரு. ரத்தன்சந்த் சுமர்சந்த் பாப்னா பெயரில் உள்ள சான்றிதழ் எண் 33105 மற்றும் குறியீட்டு எண்கள் 1793812–1793816 கொண்ட 5 காகித வடிவிலான பங்குகளை மாற்றுவதற்கான கோரிக்கையை நிறுவனம்/RTA பெற்றுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியான 30 நாட்களுக்குள் நிறுவனம் அல்லது RTA–க்கு எந்த ஆட்சேபனையும் வரவில்லை என்றால், திரு. ரத்தன்சந்த் சுமர்சந்த் பாப்னா பெயரில் அவற்றை மாற்றுவதற்கான பணிகளை நிறுவனம் மேற்கொள்ளும்.

**லார்ட்ஸ் குளோரோ அல்காலி லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**இடம்: புது தில்லி** **பங்கஜ் மிஸ்ரா**
**தேதி: 12 மே, 2026** **நிறுவனச் செயலாளர்**



**பெயர் மாற்றம்**

நான், Tasneem Raj, W/o. Ammar Kaizer Bharmal, பிறந்த தேதி: 25-06-1999, எண்.51/70, நைனியப்பன் தெரு, 2வது தளம் முத்தியால்பேட்டை, சென்னை-600001. இல் வசிக்கிறேன் இனிமேல் Tasneem Bharmal என்று அழைக்கப்படுகிறேன்.



**பெயர் மாற்றம்**

நான், **D N KHAAMYA**, த/பெ. NIRMAL RAJ, பிறந்த தேதி: **16.03.2015**, பழைய எண்.**34**, புதிய எண்.**24**, இரண்டாவது மெயின் ரோடு, திருப்பதி நகர், கொளத்தூர், சென்னை **600 099** என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி, **N KAMYAVARSHA** என்று அழைக்கப்படுகிறேன்.

**N KAMYAVARSHA**



**மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம் விழுப்புரம்.**

பிச்சாண்டி, த/பெ. ஆதிமூலம்,
எண்.3/36 பழைய காலனி,
கன்னராம்பட்டு கிராமம்,
திருவெண்ணெய் நல்லூர் வட்டம்.

பிச்சாண்டித/பெ. ஆதிமூலம், என்ற நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது பாட்டி கெங்கம்மாள் க/பெ.பொன்னன் என்பவர் கடந்த 18/9/1974 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை அப்பொழுது இறப்பு பதிவு செய்யப்படாததால் தற்போது அவருடைய இறப்பு சான்றிதழ்கோரி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் தங்களுடைய ஆட்சேபனையை விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. இல்லையெனில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்பட்டு விடும் என்பதை அறியவும்.

**பிச்சாண்டி**
**மனுதாரர்**



**மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சமூகம் விழுப்புரம்.**

பிச்சாண்டி, த/பெ. ஆதிமூலம்,
எண்.3/36 பழைய காலனி,
கன்னராம்பட்டு கிராமம்
திருவெண்ணெய் நல்லூர் வட்டம்.

பிச்சாண்டித/பெ. ஆதிமூலம், என்ற நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது பாட்டனார் பொன்னன் த/பெ. அருணாசலம் என்பவர் கடந்த 11/6/1970 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை அப்பொழுது இறப்பு பதிவு செய்யப்படாததால் தற்போது அவருடைய இறப்பு சான்றிதழ்கோரி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் தங்களுடைய ஆட்சேபனையை விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. இல்லையெனில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்பட்டு விடும் என்பதை அறியவும்.

**பிச்சாண்டி**
**மனுதாரர்**



## டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

TANFAC

CIN : L24117TN1972PLC006271
பதிவு அலுவலகம் : 14, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், கடலூர் 607 005. தமிழ்நாடு.
Website: www.tanfac.com - Email : tanfac.invreln@anupamrasayan.com; Phone : 04142-239001-005

**தபால் வாக்குச்சீட்டு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல் குறித்த அறிவிப்பு**

நிறுவனங்கள் சட்டம், 2013ன் விதிகளின் பிரிவு 108, 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் ஏதேனும் இருந்தால் அவை உட்பட மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20 மற்றும் விதி 22, செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதி 44 (''செபி பட்டியல் விதிமுறைகள்''), இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலக தரநிலை (SS-2), இந்திய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகத்தால் (MCA) பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள், மின்னணு வாக்களிப்பு (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) மூலம் பொதுக் கூட்டங்களை நடத்துதல் / தபால் வாக்குச் சீட்டு செயல்முறையை நடத்துதல் தொடர்பான ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020, ஜூன் 15, 2020 தேதியிட்ட 22/2020, செப்டம்பர் 28, 2020 தேதியிட்ட 33/2020, டிசம்பர் 31, 2020 தேதியிட்ட 39/2020, ஜூன் 23, 2021 தேதியிட்ட 10/2021, டிசம்பர் 8, 2021 தேதியிட்ட 20/2021, மே 5, 2022 தேதியிட்ட 3/2022, டிசம்பர் 28, 2022 தேதியிட்ட 11/2022, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட 09/2023 மற்றும் செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட 09/2024 மற்றும் செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட 03/2025 ஆகியவற்றுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் (''அறிவிப்பு'') குறிப்பிடப்பட்டுள்ளபடி, மின்னணு முறையில் (''தொலைதூர மின்னணு வாக்களிப்பு'') வாக்களிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட தீர்மானத்திற்கு சிறப்புத் தீர்மானம் மூலம் நிறுவன உறுப்பினர்களின் ஒப்புதலை நிறுவனம் கோருகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனம் செவ்வாய்க்கிழமை, மே 12, 2026 அன்று மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்புவதை நிறைவு செய்துள்ளது. மே 06, 2026 தேதியிட்ட தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது வாக்களிப்பதற்காக அதன் உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குவதற்காக, நிறுவனம் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் ('CDSL') சேவைகளை ஈடுபடுத்தியுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு புதன்கிழமை, மே 13, 2026 அன்று காலை 9:00 மணி (IST) தொடங்கி வியாழக்கிழமை, ஜூன் 11, 2026 அன்று மாலை 5:00 மணிக்கு (IST) முடிவடையும். இந்தக் காலகட்டத்தில், கட்-ஆஃப் தேதியின்படி காகித வடிவில் அல்லது மின்னணு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் நிறுவன உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை மின்னணு முறையில் பதிவு செய்யலாம். அதன் பிறகு வாக்களிப்பதற்காக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொகுதி CDSLஆல் முடக்கப்படும்.

கட்-ஆஃப் தேதியின்படி உறுப்பினர் பதிவேட்டில்/பலன்பெறும் உரிமையாளர்களின் பட்டியலில் பெயர்கள் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறையில் தபால் வாக்கு மூலம் வாக்களிக்க தகுதியுடையவர்கள். கட்-ஆஃப் தேதியின்படி உறுப்பினராக இல்லாத ஒருவர் இந்த அறிவிப்பை தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கருத வேண்டும்.

இருப்பினும், கட்-ஆஃப் தேதியின்படி நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களும் (நிறுவனம்/RTA/வைப்பாளர்கள்/வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாததால் இந்த அறிவிப்பைப் பெறாத உறுப்பினர்கள் உட்பட) மே 06, 2026 தேதியிட்ட தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையின்படி மேற்கூறிய தீர்மானம் தொடர்பாக வாக்களிக்க உரிமை உண்டு என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மின்னணு வாக்குப்பதிவு செயல்முறை மூலம் தபால் வாக்குப் பதிவை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, பயிற்சி நிறுவனச் செயலாளரான M.D. பெய்ட் அசோசியேட்ஸ் அவர்களை ஆய்வாளராக நியமித்துள்ளது.

தனிநபர்கள், தனிநபர் அல்லாதவர்கள் மற்றும் காகித வடிவில் மற்றும் டீமேட் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கான தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான விரிவான செயல்முறை மற்றும் முறை தபால் வாக்குச்சீட்டு அறிவிப்புக்கான குறிப்புகளில் விளக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால், அது குறித்து நீங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") - https://www.evotingindia.com/Help.jsp மற்றும் https://www.evotingindia.com/Help.jsp-இல் கிடைக்கும் மின்னணு வாக்குப்பதிவு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது helpdesk.evotingcdslindia.com-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது CDSL அதிகாரிகளான திரு. நிதின் குந்தர் (022- 23058738) அல்லது திரு. சூரஜ் ரமேஷ் (022- 23058543) அல்லது திரு. ராகேஷ் தல்வி (022 23058542) ஆகியோரைத் தொடர்பு கொள்ளவும். தொலைதூர மின்-வாக்களிப்பு தொடர்பான குறைகளை நிறுவன அதிகாரிகளை அதாவது நிறுவன செயலாளர் வினோத் குமார் எஸ் அவர்களை, பதிவு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் + 04142- 239001/239002, மின்னஞ்சல் முகவரி : tanfac.invrelnanupamrasayan.com.

தேதி : 12.05.2026
இடம் : கடலூர்

டான்பாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக
அப்சல் மல்கானி S
நிர்வாக இயக்குநர்



## ஹரி அண்டு கம்பெனி இன்வெஸ்மென்ட்ஸ் மெட்ராஸ் லிமிடெட்

( முன்னர் ஹரி அண்டு கம்பெனி இன்வெஸ்ட்மென்ட்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது )
(CIN - U65991TN1989PLC017066)
பதிவு அலுவலகம் : 8-வது தளம், பிளாக் 1, பிரஸ்டீஜ் ஜகரியா மெட்ரோபாலிட்டன்,
எண். 200/1-8, அண்ணா சாலை, சென்னை - 600002.

**31 மார்ச், 2026 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்**

[ செபி (பட்டியல் கடமைகள் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015-ன் விதி 52 (8) மற்றும் விதி 52 (4) ]

(ரூபாய் லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | 31 மார்ச், 2026ல் முடிவடைந்த காலாண்டு | 31 மார்ச், 2025ல் முடிவடைந்த காலாண்டு | 31 மார்ச், 2026ல் முடிவடைந்த ஆண்டு | 31 மார்ச், 2025ல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | ( த.ஆனது ) | ( த.ஆனது ) | ( த.ஆனது ) | ( த.ஆனது ) |
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம் | 1.37 | 9.27 | 154.53 | 36.72 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் / ( நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன் ) | 0.98 | 6.21 | 134.35 | 18.63 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 0.98 | 6.21 | 134.35 | 18.63 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 12.70 | 4.68 | 110.10 | 12.52 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) ( வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது | - | - | - | - |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 75.00 | 75.00 | 75.00 | 75.00 |
| 7 | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 2,625.98 | 2,515.88 | 2,625.98 | 2,515.88 |
| 8 | பங்கு பிரீமியம் கணக்கு | - | - | - | - |
| 9 | நிகர மதிப்பு | 2,700.98 | 2,590.88 | 2,700.98 | 2,590.88 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | - | - | - | - |
| 11 | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - | - |
| 12 | கடன் பங்கு விகிதம் | - | - | - | - |
| 13 | பங்கு ஒன்றின் வருவாய் ( தலா ரூ.10/-) ( தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது) | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது |
| | 1. அடிப்படை | 1.69 | 0.62 | 14.68 | 1.67 |
| | 2. டைலூட்டட் | 1.69 | 0.62 | 14.68 | 1.67 |
| 14 | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil |
| 15 | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil |
| 16 | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA | NA |
| 17 | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA | NA |

**குறிப்பு :**

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015-ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்ஸ்சேஞ் போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52(8) மற்றும் விதி 52(4)-ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் ( URL.www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளமான ( www.vivriticapital.com /investors.html ) - ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52 (4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ் (பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து ( www.bseindia.com ) ல் அணுகலாம்.

இயக்குநர் குழுவின் சார்பாக
**ஹரி அண்டு கம்பெனி இன்வெஸ்ட்மென்ட்ஸ் மெட்ராஸ் லிமிடெட்டுக்காக**
( முன்னர் ஹரி அண்டு கம்பெனி இன்வெஸ்ட்மெட்ஸ் மெட்ராஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது )
**வினீத் சுகுமார்**
நிர்வாக இயக்குனர்
DIN 06848801

இடம் : சென்னை
தேதி : 11-05-2026